பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 27 | செவ்வாய்க்கிழமை | 13.01.2026 | அதிர்வு 166

## இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!



பொலனறுவை, வெலிகந்தைப் பகுதியில் பொலிஸாரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 28 வயதான 07



# கிளிநொச்சியில் கோர விபத்து! நால்வர் அதே இடத்தில் மரணம்!!

## ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டை - நான்காம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் அதே இடத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று மாலை 4.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 05






இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் தனது தனித்துவமான நடவடிக்கைகள் மூலம் சர்ச்சைக்குரியவராக மாறி வருபவர் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரான சிவஞானம் சிறிதரன்.

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினரான அவர் தேவையில்லாமல் விழுந்தடித்து ஆளும் தரப்புக்கு முண்டு கொடுக்கின்றார் என்பது அரசமைப்பு கவுன்ஸில் விவகாரத்தில் அவருக்கு எதிரான விடயமாக உருப் பெருக்கிக் காட்டப்படுகின்றது.

அந்த விடயத்தில் சூடு அடங்கும் முன்னர் அல்லது அந்தப் பிரச்சினைக்கு சமூகத் தீர்வு எட்டப்பட முன்னர் – இன்னொரு விடயத்தில் அரசுக்கு சார்பாக விழுந்தடித்து அதிகமாக அவர் முண்டு கொடுக்கின்றார் என்று இப்போது கட்சிக்குள் தலைமை மட்டத்தில் முணுமுணுப்புக்கள் தொடங்கி உள்ளன என அறிய வருகின்றது.

கல்வி அமைச்சரான பிரதமருக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் 06









# அநுர அரசாங்கம் மீது தமிழருக்கு நம்பிக்கை

## ஆஸ்திரேலிய தூதுவரிடம் வடக்கு ஆளுநர் எடுத்துரைப்பு

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளனர்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் மத்யூ டக்வொர்த்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை மேற்படி சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம் குறித்தும் ஆளுநர் தெளிவுபடுத்தினார்.

“வடக்கு மாகாணத்தில் விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி ஆகிய துறைகள் மிகுந்த வளமுடையவை. ஆனால், இவை எவ்விதப் பெறுமதிசேர் செயற்பாடுகளுமின்றி மூலப்பொருட்களாகவே இங்கிருந்து வெளியே கொண்டு செல்லப்படுகின்றன.

வடக்கில் இவற்றைப் பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கான தொழிற்சாலைகள் இல்லை. போருக்கு முன்னர் இயங்கிய தொழிற்சாலைகளும் தற்போது இல்லை.

எனினும், தற்போதைய அரசு இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் மூன்று விசேட முதலீட்டு வலயங்கள் அமைக்கப்படவுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறைசார் முதலீடுகளுக்கான வாய்ப்புகளை வழங்கவுள்ளன.

அதேவேளை, ‘த மனேஜ்மன்ட் க்ளப்’ அமைப்பால் வடக்கு மாகாண முதலீட்டாளர் மாநாடு எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது. இவை சாதகமான சமிக்ஞைகளாக அமைந்துள்ளன.” – என்றும் ஆளுநர் கூறினார்.

தொடர்ந்து காணி விவகாரம் குறித்துப் பேசிய ஆளுநர்,

“கடந்த காலங்களில் மக்களின் வாழ்விட மற்றும் விவசாயக் காணிகள், வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தன்னிச்சையாகப் பறிக்கப்பட்டன.

அவற்றை மீள மக்களுக்கே வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தற்போதைய அரசு ஆரம்பித்துள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றங்களைச் சந்தித்திருந்தனர்.

ஆனால், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை தமிழ் மக்கள் நம்புகின்றனர். அவர் மீது மிகுந்த எதிர்பார்ப்பையும் வைத்துள்ளனர.” – என்று சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப் புச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# இலங்கை மீண்டெழ சீனா முழு ஆதரவு!

## விஜித ஹேரத்திடம் வாங் யீ உறுதி

இலங்கை விரைவான மீட்சிக்கான சரியான பாதையில் உள்ளது என்றும், அந்த நோக்கத்துக்காக சீன அரசு அதன் முழு ஆதரவையும் வழங்கும் என்றும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ குறிப்பிட்டார் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்த சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீயை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைவதாகவும் விஜித ஹேரத் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீயை வரவேற்று, டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட அவசர அனர்த்த நிவாரணத்துக்காக சீன அரசுக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, மேம்பாட்டு ஒத்துழைப்பு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப் பட்டது.

குறிப்பாக, டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையின் மறுசீரமைப்பு செயல்முறை குறித்த விவாதத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அடையாளம் காணப்பட்ட வீதிகள், ரயில் பாதைகள் மற்றும் பாலங்களை மறுசீரமைப்பது உள்ளிட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டில் சீன அரசின் உதவியைக் கோரியுள்ளோம்.

அந்தக் கோரிக்கையில் தான் தனிப்பட்ட முறையில் தலையிடுவதாக அமைச்சர் வாங் யி உறுதியளித்தார்.

இலங்கை விரைவான மீட்சிக்கான சரியான பாதையில் உள்ளது என்றும், அந்த நோக்கத்துக்காக சீன அரசு அதன் முழு ஆதரவையும் வழங்கும் என்றும் அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.” – என்றும் விஜித ஹேரத் பதிவிட்டுள்ளார்.

# ஜனவரி 15 வரை மழை தொடரும்!

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் பரவலான மழை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“விவசாயிகள் அதற்கேற்ற வகையில் தங்களுடைய அறுவடைச் செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்வது சிறந்தது.

மத்திய, மேல், சபரகமுவா, ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கும் எதிர்வரும் 15.01.2026 வரை மிதமானது முதல் சற்று கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை இரவில் வெப்பநிலையில் ஏற்படும் வீழ்ச்சியும், ஈரப்பதன் மாற்றமும் குளிரான காலநிலையை ஏற்படுத்துகின்றன. இந்த நிலைமை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் வாய்ப்புள்ளது.” – என்றார்.

# புதையல் தோண்டிய 4 பேர் சிக்கினார்கள்

கிளிநொச்சி மின்சார வாரிய சுற்றுலா விடுதியில் புதையல் தோண்டிய 4 மின்சார சபை உத்தியோகத்தர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி அறிவியல் நகர் சிறப்பு அதிரடிப்படை முகாமின் டி.ஆர்.எல். அதுக்கோரல அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினருக்கு நேற்றுமுன்தினம் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி மின்சார வாரிய சுற்றுலா விடுதி பகுதியில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டனர்

இதன்போது விடுதி பகுதியில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த அனுராதபுரம் மின்சார வாரியத்தில் பணியாற்றும் 4 ஊழியர்கள், புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பொருள்களுடன் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.





# சஜித்துக்குத் தொலைபேசி ஊடாக ரணில் நேற்று பிறந்தநாள் வாழ்த்து!

## மத வழிபாட்டு நிகழ்வுக்கும் பிரதிநிதிகள் அனுப்பி வைப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி ஊடாக பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சஜித்தின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வுக்குத் தமது பிரதிநிதிகளையும் ரணில் அனுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் 59 ஆவது பிறந்தநாள் நேற்றாகும்.

இதனைமுன்னிட்டுகொழும்பு,ஹுணுபிட்டிய கங்காராம விகாரையில் விசேட வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, சிரேஷ்ட உப தலைவர் சாகல ரத்நாயக்க மற்றும் ரவி கருணாநாயக்க எம்.பி. ஆகியோர் பங்கேற்று வாழ்த்துக் கூறினர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. ஆகியோரும் பங்கேற்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றை ஒன்றிணைப்பதற்குரிய பேச்சு வெற்றியை நோக்கிப் பயணிப்பதை நேற்றைய நிகழ்வு உறுதிப்படுத்தியுள்ளது.

சஜித்தின் பிறந்தநாள் நிகழ்வில் ஐ.தே.க. பிரதிநிதிகள் பங்கேற்றமை இரு தரப்பு இணைவுக்கான இறுதியான – உறுதியான சமிக்ஞை எனத் தெரியவருகின்றது.

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்கஆகியஇருவரும்நேரடியாகசந்தித்து பேச்சு நடத்திய பின்னர் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும்.

சஜித்துடன் இணைந்து செயற்படத் தயார் என்பதையே ரணில், சஜித்துக்கான பிறந்தநாள் பரிசாக வழங்கியுள்ளார் என்று ஐ.தே.க. ஆதரவாளர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.







## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசுவமடு பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கார் ஒன்றும், வவுனியாவில் இருந்து விசுவமடு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது கார் முற்றாகச் சேதமடைந்துள்ளது. அதில் பயணித்த 4 பேர் பலியாகியுள்ளனர். ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் விசுவமடு பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பொன்னையா பூபாலன், 34 வயதுடைய சந்திரகுமார் சவேந்திரன் புன்னைநீராவி பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் குணதர்ஷன், அதே பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய யுவானி பிரசாத் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.











# பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு சட்டமானால் ஜனநாயகம் அழியும்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



"அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு சட்டமானால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும். இந்த சட்டவரைவை நீக்க கோரி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அறிவுறுத்த வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரிடம் வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் கண்டி அஸ்கிரிய பீடத்துக்கு சென்று மகாநாயக்க தேரரை சந்தித்து கலந்துரையாடும் போது மேற்கண்டவாறு வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய கல்வி கொள்கை பல்வேறு தரப்பிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது என்பதற்காக அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாது.

பொதுமக்களுடன் எவ்விதமான வெளிப்படையான கலந்துரையாடல்களும் இல்லாமல் தான் அரசாங்கம் புதிய கல்வி கொள்கையை அமுல்படுத்தியுள்ளது. நாட்டின் கலாசாரத்துக்கு எதிராக விடயங்களை கல்வி கொள்கையில் உள்ளடக்கினால் அது விளைவுகளை ஏற்படுத்தும்.

புதிய கல்விக் கொள்கை தொடர்பில் அரசாங்கம் சகல தரப்பினருடனும் வெளிப்படையான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயற்பட வேண்டும்.

நீதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டிலும் பாரதூரமானது.

பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு சட்டமானால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும், ஊடக சுதந்திரம் அரச அடக்குமுறைக்கு உள்ளாகும். ஆகவே இந்த சட்டவரைவை நீக்குமாறு மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அறிவுறுத்த வேண்டும்."

– என்று வலியுறுத்தினார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணை நகர்வை முன்னெடுத்த போது, அது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல் குழு உறுப்பினர்களும் வாட்ஸ் அப் செயலியூடாக தங்களுக்குள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர் என்று தெரிகின்றது. கட்சியின் தலைவர், செயலாளர் உட்பட எல்லோருமே கருத்துப் பரிமாறியமையின் அடிப்படையில் ஒரு முடிவு எட்டப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பிக்கும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழரசுக் கட்சி ஒப்பமிடுவதில்லை என்பதே அந்த முடிவு.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் அடுத்த கட்டமாக என்ன முடிவெடுப்பது, அது தொடர்பான விவாதத்தில் என்ன நிலைப்பாடு எடுப்பது என்பவை குறித்து பின்னர் அரசியல் குழுவும் நாடாளுமன்றக் குழுவும் கலந்தாய்ந்து முடிவு செய்யலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வருகிறது.

முதலில் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெளியாகட்டும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பரிசீலிக்க வேண்டும் என்று கருதப்பட்டது.

அடுத்து, கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக தமிழர் தரப்பின் சில நிலைப்பாடுகளை நிபந்தனைகளாக முன்வைக்க வாய்ப்பு கிடைத்தால் அவற்றையும் – அதனையும் – பயன்படுத்த வேண்டும். 1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 44 ஆண்டுகளுக்குப் பிறகு வருகின்ற கல்வி சீர்திருத்தம் இது. அடுத்த கல்விச் சீர்திருத்தம் இன்னும் எத்தனை தசாப்தங்களுக்குப் பின்னர் வருமோ தெரியாது. இந்தப் பின்புலத்தில் வரலாற்றுப் பாடத்தில் தமிழர்களின் சரித்திரம் தொடர்பான விடயங்கள் உரிய முறையில் சேர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை முன்நிறுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்தால் அதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தும் சூழலைப் பார்த்திருக்க வேண்டும் என்ற கருத்து கட்சியில் எல்லா மட்டத்திலும் இருப்பதாகத் தெரிகின்றது.

ஆனால் அத்தகைய விடயங்களை நிபந்தனைகளாக விதித்து, நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தை கையாள்வதற்கான வாய்ப்பை திறந்து வைத்திருக்காமல், சிறிதரன் தம்பாட்டில் தீர்மானித்து, நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க மாட்டோம் என்று அரசுக்கு முண்டு கொடுக்கும் அறிவிப்பை – அதிலும் அவசரப்பட்டு, தன்னிஷ்டப்படி வெளியிட்டமை கட்சி தலைமை மற்றும் கட்சியின் பிறமட்டங்களிலும் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக அறிய வருகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழரசு கட்சியின் நிலைப்பாட்டை அரசுக்கு சில நிபந்தனைகளோடு தெரியப்படுத்தி, அதன் அடிப்படையில் தீர்மானங்களை முன் நகர்த்துவதற்கான வாய்ப்பை குழப்பி, அரசுக்கு ஆதரவு – நம்பிக்கையில்லா பிரேரணையைச் சமர்ப்பிக்கும் எதிரணிக்கு எதிர்ப்பு – என்று சிறிதரன் தன்பாட்டில் அவசரப்பட்டு அறிவித்துப் போட்டடித்துக் குழப்பி விட்டார் என்ற கருத்து நிலைப்பாடு கட்சிக்குள் 'வலு சூடாக' இருப்பதாகத் தெரிகிறது. அது எப்போது, எங்கு விவகாரமாக வெளிப்படும் என்று பார்த்திருக்கலாம்.

* * *

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் ஏதாவது போராட்டத்திற்கான முஸ்தீபு செய்தால் போதும். பொலிஸார் விழுந்தடித்து நீதிமன்றுக்கு செல்வார்கள். நீதிமன்றங்களும் கூச்சநாச்சம் இன்றி தடை உத்தரவுகளை அள்ளி வாரி வழங்கி விடும். இதுதான் இங்கு அவ்வப்போது நடப்பது.

ஆனால் நேற்று விமல் வீரவன்ஸ நடத்தும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு எதிராகவும் பொலிஸார் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அவர்கள் அங்கு வீதிப் போக்குவரத்தைப் பாதிக்காமல், நடைபெறுகின்ற உயர்தரப் பரீட்சைக்கு ஒலி பெருக்கிகள் மூலம் குழப்பம் ஏற்படுத்தாமல், போராட்டத்தை நடத்துவதற்கு விமல் வீரவன்ஸவுக்கு அனுமதி பெற்று கொடுத்திருக்கிறார்கள்.

பேரினவாத மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் திமிர் பேர்வழிகள் விடயத்தில் பொலிஸூம் நன்கு வளைந்து கொடுக்கிறது என்பதற்கு இது நல்ல உதாரணம்.

* * *

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் 59ஆவது பிறந்த தினம். அதை ஒட்டிய மத நிகழ்வுகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலர் பிரசன்னமாகி இருந்தமை தென்னிலங்கை ஊடகங்களில் அதிகம் பேசப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி



யில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமானவர்களான கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜயவர்த்தன, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க போன்ற ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவர்கள் நிகழ்வில் பங்கு பற்றியமை ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான இணைப்பு சாத்தியமாகி வருவதற்கான சான்றுகளாக – சமிக்ஞைகளாக – கருதப்படுகின்றன.



# முறிந்து விழும் அபாயத்தில் உள்ள பருத்தித்துறை துறைமுக மின் கம்பம்



பருத்தித்துறை துறைமுக பகுதியில் உள்ள மின் கம்பம் ஒன்று எந்த நேரமும் முறிந்து விழும் அபாய நிலையில் காணப்படுகிறது.

சீமெந்தினால் அமைக்கப்பட்ட அந்த மின் கம்பத்தின் அடியில் இருந்து மேல் நோக்கியதாக அரைவாசி பகுதி சிதைவுக்குள்ளான நிலையில் காணப்படுகிறது.

வேகமாக காற்று வீசும் சந்தர்ப்பத்தில் முறிந்து விழும் அபாய நிலை காணப்படுகிறது.

பருத்தித்துறை துறைமுக பகுதிக்கு அதிகளவானோர் தினமும் மாலை வேளையில் வந்து செல்கின்ற பொழுதுபோக்கிடமாக காணப்படும் நிலையில், மேற்படி மின்கம்பம் உடனடியாக மாற்றப்பட்டு ஆபத்தினை தவிர்க்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## 10 தமிழக மீனவர்கள் இன்று காலை கைது



(ந.லோகதயாளன்)

தமிழ்நாடு இராமேஸ்வரத்தைச் சேர்ந்த படகு ஒன்றில் வந்த 10 தமிழக மீனவர்கள் இன்று அதிகாலை நெடுந்தீவுக்கு அப்பால் இலங்கைக் கடற்பரப்புக்குள் வைத்து இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரியவந்தது.

## இளைஞர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாரின் வழக்கமான கடமைகளின் போது சந்தேகநபர் பொலிஸ் உத்தரவுகளை மீறி முன்னேறியதுடன், அதிகாரிகளைக் கூர்மையான ஆயுதங்களால் தாக்க முயன்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், தங்களின் உயிர் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த 28 வயதான இளைஞர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலனறுவை – வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

சம்பவத்தின் முழு பின்னணியைக் கண்டறிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஏன் இந்த இழுபறி?

பேரிடர் பாதிப்புக்களில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்பதற்காகப் பெருந்தொகை நிதி செலவிடப்பட வேண்டி இருக்கின்றது. இது தொடர்பில் கணிசமான நிதி வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டிலிருந்தும் கிடைத்து வருகின்றது. இவற்றையெல்லாம் ஒன்றிணைத்து, சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கத்தோடு பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. இவை எல்லாவற்றுக்கும் பெருமளவில் நிதி செலவிடப்பட வேண்டும்.

அந்த நிதி முறையான வகையில் செலவிடப்படுகின்றமையையும், அது தொடர்பான விடயங்கள் வெளிப்படைத் தன்மையாக இருக்கின்றமையையும் உறுதி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு நாட்டின் கணக்காய்வாளர் நாயகம் பதவி மிக முக்கியமாகும். இந்தச் சமயத்தில்தான் நாட்டில் அப்பதவி நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து ஏறத்தாழ பத்து மாதங்களுக்கு மேல் இந்தப் பதவி நிரப்பப்படவில்லை. பதில் பதவிக்கு சிலர் கடமையாற்றினர். ஆனால் கடந்த டிசம்பர் 8ஆம் திகதி முதல் ஒரு மாதத்திற்கு மேலாக இந்தப் பதவி நிரப்பப்படவேயில்லை.

இப்பதவிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பரிந்துரைத்த நான்கு பேரையுமே அரசமைப்புக் கவுன்ஸில் நிராகரித்துவிட்டது.

இந்த விடயம் - இந்த பதவிக்கு பொருத்தமானவரை நிரப்புகின்ற விவகாரம் - நாட்டுக்கு மிக முக்கியமானது, அவசரமானது, அவசியமானது என்பதை நாடாளுமன்றத்தின் பொது நிதிக் குழுவின் (‘கோபா’ குழுவின்) தலைவர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா எம்.பி. ஜனாதிபதிக்கும் அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க முயற்சி எடுத்திருக்கின்றார்.

இருதரப்பினரும் ஒன்றிணைந்து தங்களுக்குள் உடன்பட்டு, இந்தப் பதவிக்கு விரைந்தும், தாமதம் இன்றியும், பொருத்தமான ஒருவரை நியமிப்பது அவசரமான, அவசியமான விவகாரமென அவர் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதிக்கு நேரடியாகக் கடிதத்தை அனுப்பிய அவர், அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர்களுக்கான தனது கோரிக்கைக் கடிதங்களை அவர்களுக்கு முகவரியிட்டு, அரசமைப்புக் கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். ஆனால் சபாநாயகரோ அந்தக் கடிதங்களை சம்பந்தப்பட்ட அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர்களுக்கு விநியோகிக்காமல் திரும்பவும் கலாநிதி ஹர்ஷா டி சில்வாவுக்கே எந்தவிதக் குறிப்பும் குறிப்பிடாமல் மீள அனுப்பி இருக்கிறார்.

இந்த அணுகுமுறைகள் - ஜனாதிபதியினதும், அரசமைப்பு கவுன்ஸில் தலைவரான சபாநாயகரினதும், ஏனைய அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர்களினதும் செயற்பாடுகளும், போக்குகளும் - இந்தப் பதவிக்கு பொருத்தமானவரை விரைந்து நியமிக்கும் எண்ணம் அல்லது ஈடுபாடு அல்லது உறுதிப்பாடு அல்லது திடசித்தம் அவர்களுக்கு அடியோடு இல்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

பேரிடர் மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளில் இருந்து மீண்டெழ முயலும் நாடு, அதற்காக மேற்கொள்கின்ற பொருளாதார நிதி நடவடிக்கைகள் வெளிப்படையானவையாகவும் உரிய முறையில் கணக்காய்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டவையாகவும் இருக்குமா என்ற சந்தேகத்தை இந்த நியமனம் தொடர்ந்து தாமதமாகி வருகின்றமை ஏற்படுத்தி நிற்கின்றது என்பது கண்கூடு. இந்த இழுபறிப் போக்கு நாட்டின் பொருளாதார நிலைமைக்குச் சாதகமான அம்சம் அல்ல.




# திருகோணமலை - கொழும்பு இடையிலான இரவு ரயில் சேவையை மீளவும் ஆரம்பிக்குக!

## பொதுமக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை – கொழும்புக்கு இடையிலான இரவு நேர ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டில் அண்மையில் நிலவிய சீரற்ற கால நிலை மற்றும் திட்வா புயல் காரணமாக இந்த இரவு நேர சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் திருகோணமலை கொழும்புக்கான பகல் நேர சேவை சேவையில் இருந்தாலும் இரவு நேர சேவையின் மூலமாகவே அதிகளவான பயணிகள் பயணிக்கின்றனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இரவு நேர சேவை மூலமே திருகோணமலை – கொழும்பு சேவையில் பயணிக்கின்றனர்.

இரவு நேர சேவையில் குளிரூட்டப்பட்ட முதலாம் தர பெட்டி காணப்படுவதனால் அதிகளவான வெளிநாட்டு பயணிகளும் கொழும்பில் இருந்து திருகோணமலையை வந்தடைகின்றனர்.

ரயில்வேத் திணைக்களம் இவற்றைக் கருத்தில் கொண்டு இரவு நேர ரயில் சேவையைத் தாமதப்படுத்தாது மீள உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என பயணிகள் எதிர்பார்க்கின்றனர்.

# நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தின் மின்பிறபாக்கி ஒன்று வழமைக்கு திரும்பியது



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

பராமரிப்பு பணிகள் காரணமாக தற்காலிகமாக செயலிழக்கச் செய்யப்பட்டிருந்த நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின் பிறப்பாக்கி ஒன்று மீண்டும் வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அந்த மின் பிறப்பாக்கி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இதுவரையில் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படவில்லை என்பதுடன், எதிர்வரும் சில தினங்களுக்குள் அதனை தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திலுள்ள 3 மின் பிறப்பாக்கிகள் மூலம் தேசிய மின் கட்டமைப்புக்கு 900 மெகாவோட் மின்சாரம் விநியோகிக்கப்படும் நிலையில், தற்போது ஒரு மின் பிறப்பாக்கியின் ஊடாக மாத்திரமே தேசிய மின் கட்டமைப்புக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, மற்றுமொரு மின் பிறப்பாக்கி இன்னும் செயலிழந்த நிலையிலேயே உள்ளதோடு, அதனை மீண்டும் வழமைக்குக் கொண்டு வருவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிடப்படுகின்றது.



# தமிழரசுக் கட்சி மன்னார் மாவட்டக் கிளையின் பிரதிநிதிகளுடன் சத்தியலிங்கம் ஆலோசனை

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக்கிளை உறுப்பினர்களை நேற்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கட்சியின் மன்னார் மாவட்டக்கிளை அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்றங்கள் தொடர்பில் விசேடமாக கலந்துரையாடப்பட்டது. உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பிற்பாடு சபைகளில் ஆட்சியமைத்தலின் போது ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் இதன் போது விவாதிக்கப்பட்டது.

மேலும் சமகால அரசியல் நிலைவரங்கள் உட்பட கட்சியின் எதிர்கால செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.


இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், தமிழரசுக்கட்சியின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மன்னார் மாவட்டக்கிளை உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.










Acknowledgement of Complaint
Police Station
Date
Name of Complainant
Nature of Complaint
I. B. Reference
Signature of Recording Officer
Name Rank& Reg. No. of Recording Officer

# யாழில் பட்டப்பகலில் திருடப்பட்ட மோ. சைக்கிள்

(மரியசீலன் திலைக்ஸ்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரின் மோட்டார் சைக்கிள் ஒன்று யாழில் களவு போய் உள்ளது.

கட்டைக்காட்டை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்ப் பாணத்திற்கு அவசர தேவை நிமிர்த்தம் BHU 3878 இலக்கமுடைய பல்ஸர் ரக மோட்டார் சைக்கிளில் சென்றுள் ளார்.

யாழ்ப்பாணம் 5ஆம் குறுக்குத்தெரு பகுதியில் வீதியின் ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு பொருள்களை அருகில் உள்ள கடையில் கொள்வனவு செய்துள்ளார்.

ஒரு சில நிமிடங்களின் பின்பு திரும்பி வந்து மோட்டார் சைக்கிளைப் பார்த்த போது அந்த இடத்தில் மோட்டார் சைக்கிள் இருக்கவில்லை.

மோட்டார் சைக்கிள் களவு போனதை அறிந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அவரால் முறைப்பாடு அளிக்கப்பட்டது

அதன் பிரகாரம் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் அருகில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை அடிப் படையாக கொண்டு மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# ஹட்டனில் பஸ் சேவை சீரில்லை பயணிகள் பெரும் நெருக்கடியில்

(மஸ்கெலியா விசேட நிருபர்)

ஹட்டன் அரச பஸ் சேவை முன் னெடுக்கும் மஸ்கெலியா – கொழும்பு, மஸ்கெலியா – மறே, மஸ்கெலியா – ஹட்டன் போன்ற பஸ் சேவைகள் கடந்த சில நாள்களாக இல்லாமை காரணமாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள், அரச ஊழியர்கள் பெரிதும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பாக மாதாந்த பயனசீட்டை முன் கூட்டியே பணம் கொடுத்து வாங் கிய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தனியார் பஸ்களில் மீண்டும் பணம் கொடுத்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

அவ்வாறு பணம் கொடுத்து சென் றாலும் குறித்த நேரத்திற்கு கடமைக்குச் செல்ல முடியாது உள்ளது என அவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட ஹட்டன் அரச பேருந்து நிலைய அதிகாரியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது –

அடிக்கடி பஸ்கள் பழுது அடைந்து வருகின்றன. நடத்துநர் மற்றும் சாரதி கள் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.



புதியவர்களை சேவையில் இணைத்து கொள்ளவும், புதிய பஸ்களை வழங்க இன்றைய அரசு முன்வர வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் அக்கர பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதி, தலவாக்கலை நகர சபைக்கு உட்பட்ட பகுதி, ஹட்டன் –,டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பகுதி, நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதி, மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதி, அம்பகமு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு எமது அரச பஸ்கள் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பயணிகளுக்கு எமது அரச பஸ் சேவைகள் இடம் பெற்று வருகின் றன. அத்துடன் கொழும்பு, கண்டி, கதிர் காமம் போன்ற தூர சேவைகள் பல இடம் பெற்று வருகின்றன. அத்துடன் சிவனடி பாத மலைக்கு வரும் யாத் ரீகர்கள் நலன் கருதி விசேட சேவைகள் இடம் பெற்று வருகின்றன. இக் காலத் தில் ஹட்டன் அரச பஸ் நிலையத்திற்குப் புதிய பஸ்கள் வழங்குதல் மற்றும் ஆளணி பற்றாக்குறையை நீக்குதல் போன்ற உடனடி நடவசிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் முன் வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம். – என்று தெரிவித்தார்.



# ஹொப்டன் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பேரிடர் பாதிப்புச் சீரமைப்பு பணிகள் ஆரம்பம்

**(பசறை நிருபர் நடராஜா மலர்வேந்தன்)**

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில், அண்மையில் இடம்பெற்ற பேரிடர் அனர்த்தத்தால் ஏற்பட்ட சேதங்களைச் சீரமைக்கும் சுநடிரடைன ளசடையமெய திட்டத்தின் கீழ் மீள கட்டியெழுப்பும் பணிகள், கலுபொவிட்டியான தேயிலை தொழிற்சாலையின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சீரமைப்புப் பணிகளில், பாடசாலையில் பாதிக்கப்பட்ட பாதுகாப்புச்சுவர்கள்மறுஉருவாக்கம்செய்யப்படுகின்றமையுடன், பாடசாலைக் கட்டடங்களுக்கு வர்ணப்பூச்சு செய்யும் பணிகளும் இடம்பெறுகின்றன. இதற்காக ஒருமில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்னவின் வேண்டுகோளின் பேரில், கலுபொவிட்டியான தேயிலை தொழிற்சாலையின் முகாமைத்துவ குழுவினரும், பணியாளர்களும் இந்தப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.



இதன்போது தொழிற்சாலை முகாமையாளர் சுனெத் ஷாமிந்த சமரசிங்க, ஊவா மாகாணக் கல்விச் செயலாளர் நிஹால் குணரத்ன, பசறை வலயக் கல்வி பணிப்பாளர் ஸ ரினா பேகம், கோட்டக் கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.









# கலைஞர்களுக்கு அரச கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில்

(அஷ்ரப் ஏ சமத்)

கலாசாரத் திணைக்களம் வருடா வருடம் கலைஞர்களுக்கான அரச விருது (கலாபூஷணம்) வழங்கும் வைப வத்தில் 2025 ஆண்டுக்கான விருது வழக்கும் விழா நேற்று திங்கட்கிழமை 12ஆம் திகதி கொழும்பில் உள்ள அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ் வில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, பிரதி அமைச் சர்கள் எம்.எம். முனீர் மெலபர், கமகெதர திஸநாயக்க, அமைச்சின் மேலதிக செயலாளர், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி கே.எஸ்.தில்ஹானி மற்றும் கலை ஞர்கள், நடுவர்களும் கலந்து கொண் டனர்.

2025ஆம் ஆண்டுக்கு அரச விருதுக்காக நாடளாவிய ரீதியிலிருந்து 200 கலைஞர்களுக்கு விருதும், சான்றிதழுன், 25 ஆயிரம் ரூபாவுக்கு காசோலையும் வழங்ப்பட்டன. இதில் சிங்கள கலைஞர்கள் 168 பேர், தமிழ் கலைஞர்கள் 27 பேர், முஸ்லிம் கலை ஞர்கள் 05 பேரும் அடங்குவர். இலக் கியம், நடனம், இசை, நாடகம், ஓவியம் மற்றும் சிற்பம் ஆகிய துறைகளில் இக்கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

















# இந்திய இழுவைமடிப் படகுகளைத் தேடி கடற்படையின் டோரா படகுகள் ரோந்து

**(மரியசீலன் திலைக்ஸ்)**

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, சுண்டிக்குளம் கடற்பரப்புகளில் ஆதிக்கம் செலுத்தும் இந்தியன் இழுவைமடிப் படகுகளைத் தேடி கடற்படையின் டோராப் படகுகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

அண்மைய நாள்களாக வடமராட்சி கிழக்கில் அத்துமீறி நுழைந்து, கரைக்கு அண்மையாக வருகை தந்து இந்தியன் இழுவைமடி படகுகள் அட்டகாசம் செய்து வந்தன.

இதற்கு வடக்கு மீனவர்கள், அரசியல் வாதிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டு கடற்படை கைது செய்யவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்த நிலையில் நேற்றுக் கடற்படையின் டோரா படகுகள் இந்தியன் இழுவைமடிப் படகுகளைத் தேடி வடமராட்சி கிழக்குக் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையைக் காணக்கூடியதாக இருந்தது.




# மன்னாரில் நீண்ட காலமாகக் கேட்பாரின்றி கிடந்த வீதி ஜனாதிபதி வருகின்றமையால் அவசரமாகச் சீர்திருத்தம்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் தபாலகத்தில் இருந்து செத்பார் செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக குண்டும் குழியுமாக காணப்படும் நிலையில், இந்த வீதியைப் புனரமைப்பு செய்ய பல தரப்பினரால் கோரிக்கை முன் வைக்கப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் வியாழக் கிழமை மன்னாரிற்கு ஜனாதிபதி விஜயம் செய்யவுள்ள நிலையில் அந்த வீதியில் காணப்படுகின்ற குண்டும் குழியையும் செப்பனிடும் பணியில் உரிய திணைக் களத்தினர் இப்போது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், இந்த வீதியை முழுமையாக அபிவிருத்தி செய்ய உரிய திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

இவ்விடயம் தொடர்பாக குறித்த வீதிக்கு பொறுப்பான திணைக்களத்திடம் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து முறையிட்டு வந்தனர். எனினும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. இதனால் இந்த வீதியூடாக மழைக் காலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் மன்னாரில் எதிர் வரும் வியாழக்கிழமை இடம் பெறவுள்ள காற்றாலை மின் கோபுர திறப்பு விழா மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு போன்றவற்றில் ஜனாதிபதி கலந்து கொள்ள உள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் வருகையையொட்டி தற்போது அந்த வீதியில் காணப்படுகின்ற பாரிய குழிகளை நிரப்பி செப்பனிடும் பணியை உரிய திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.








# பலாலி, காங்கேசனில் பயன்படுத்த ஆஸி 2 ஸ்கானர்களை வழங்கியது

ஆஸ்திரேலிய எல்லைப் படையினரால் இலங்கை சுங்க திணைக்களத்திற்கு, 02 உயர் தொழில்நுட்ப ஸ்கானர்கள் வழங்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அதன்போது, ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மேத்யூ டக்வொர்த், இலங்கை சுங்க இயக்குநர் ஜெனரல் சீவலி அருகோடவிடம் ஸ்கானர்களை அதிகாரபூர்வமாக ஒப்படைத்தார்.

நிகழ்வில், சுங்க இயக்குநர் ஜெனரல் பால் எட்வர்ட்ஸ், ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் பயன்படுத்துவதற்காக ஆஸ்திரேலிய எல்லைப் படையினரால் இலங்கை சுங்கத்திடம் இந்த 02 ஸ்கானர்களும்வழங்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

















# கூழாமுறிப்பில் ரவிகரனின் மக்கள் குறைகேள் சந்திப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட கூழாமுறிப்பு கிராமத்தில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று முன்தினம் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தினார்.

கூழாமுறிப்பு கிராமமக்களின் வேண்டுகோளிற்கு அமைவாக கூழாமுறிப்பு பொதுநோக்கு மண்டபத்தில் இது இடம்பெற்றது.

உள்ளக வீதிகளின் சீரமைப்பு, பழுதடைந்த வீதிவிளக்குகளை சீர்செய்தல், கூழாமுறிப்பு குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் சீரின்மையால் குளத்துநீர் குடியிருப்புகளுக்குள் உட்புகுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல், முத்துஜயன் கட்டு ஏழாம் கண்டம் கமக்கார அமைப்பினைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல், முத்து ஜயன்கட்டு ஏழாம்கண்டத்திற்குரிய நீர்ப்பாசன வாய்க்காலை அமைத்தல், விவசாய வீதிகளைச் சீரமைத்தல், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் இதன்போது முன்வைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் சீரின்மையால் குளத்து நீர் குடியிருப்புக்குள் உட்புகுவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நேரடியாகச. சென்று பார்வையிட்டார்.

அத்தோடு கூழாமுறிப்பு குளத்தின் கீழான கீழ்வெளி வயல் நிலங்களுக்குச் செல்லும் விவசாய வீதிசீரின்மை மற்றும் கீழ்வெளி விவசாய நிலங்களுக்கான நீர்ப்பாசன வாய்க்கால் வசதியை ஏற்படுத்துவது தொடர்பான விடயங்களையும் அவர் பார்வையிட்டார்.

தமக்கு எழுத்துமூலமாக கோரிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு மக்களிடம் அவர் கேட்டுக்கொண்டமையுடன், கூழாமுறிப்பு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படுமெனத் தெரிவித்தார்.











# இயற்கையைப் போற்றும் தைத்திருநாளில் மண் பானைகளில் பொங்கல் இடுவோம்!

## பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பொ.ஐங்கரநேசன் அழைப்பு

மதங்களைக் கடந்து இயற்கையைப் போற்றுகின்ற ஒரு பண்பாட்டுப் பெருவிழா தைப்பொங்கல். இத்திருநாளில் தொன்று தொட்டு இயற்கைக்கு இசைவான மண் பானைகளிலேயே பொங்கி வந்துள்ளோம். ஆனால், மண்பானைகளின் இடத்தை இப்போது அலுமினியப் பானைகள் ஆக்கிரமித்து விட்டன. இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு பெருவிழாவில் அலுமினியப் பானைகள் பொருத்தம் இல்லாதவை. உடல் நலத்துக்குக் கேடானவையாகவும் உள்ளன. எனவே இயற்கையைப் போற்றுகின்ற இத்தைத்திருநாளில் மண்பானைகளில் பொங்கல் இடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

பசுமை இயக்கத்தின் மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சி வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை யாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

அலுமினியம் பாரம் இல்லாததால் இலகுவில் கையாளக்கூடியதாக உள்ளது. உலோகம் என்பதால் இலகுவில் வெப்பத்தைக் கடத்த வல்லது. இதனால், சமையலை விரைந்து முடிக்க வல்லது. நெளிந்து வளைந்தாலும் உடைந்து விடாது. ஒப்பீட்டளவில் விலையும் மலிவானது. இவை போன்ற காரணங்களால் சமையல் அறைகளில் பிரதான பாத்திரங்களாக அலுமினியப் பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. அலுமினியப் பாத்திரங்களில் உணவு சமைக்கும்போது



அலுமினியம் உணவுடன் சேர்வதைத் தவிர்க்கும் பொருட்டுப் பாத்திரத்தின் உட்பகுதியில் அலுமினியம் ஒட்சைட்டுப் படலம் பூசப்படுகிறது.

அலுமினியப் பாத்திரங்களைச் சுத்தம் செய்யும்போது பாதுகாப்புப்படலம் தேய்வடைந்து உணவுப் பாதுகாப்பு கேள்விக் குறியாகிறது. சமைக்கப்படும் உணவுப் பொருளின் அமில, கார இயல்பு, சேர்க்கப்படும் உப்பு, சமைக்கும் வெப்பநிலை ஆகியனவற்றைப் பொறுத்து அலுமினியம் உணவுடன் கலப்பதும் கண்டறியப் பட்டுள்ளது. உடலில் சிறுகச் சிறுகச் சேரும் அலுமினியம் மூளை நரம்புகளைப் பாதிக்கிறது. இதனால் நினைவாற்றலும் பேச்சுத் திறனும் தடைப்படுகின்றன. ஏற்கனவே சிறுநீரக நோயுடையவர்களின் சிறுநீரகங்கள் மேலும் பாதிப்படைகின்றமையோடு எலும்புகளும் பலம் இழக்கின்றன என ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

மண்பானைகள், அவற்றின் மேற்பரப்பில் இயற்கையாகவே உள்ள நுண்ணிய துவாரங்கள் வழியாக வெப்பத்தைப் பரப்பி உணவைச் சீராக வேகவைக்கிறது. மெதுவாகவே சூடுபடுத்துவதால் உணவில் போசணைப் பொருள்களின் அழிவு மட்டுப்படுத்தப்படுகிறது. மண், கார இயல்பு கொண்டதால் உணவில் அமிலத் தன்மையைச் சமன் செய்கிறது. சமைக்கும்போது மண்ணிலிருந்து கனியுப்புகள் உணவுடன் சேர்வதால் உணவின் போசணைப் பெறுமானம் அதிகரிக்கிறது. இவற்றோடு உணவின் வாசனையுடன் மண்ணின் வாசனையும் சேர்ந்து கொள்ள உணவுக்குத் தனியானதொரு சுவையும் கிடைக்கின்றது.

எல்லாவற்றையும் அவசரம் அவசரமாகச் செய்துவிட வேண்டும் என்று நினைக்கும் நாம், உடலின் ஆரோக்கியத்தைப் பேணவேண்டிய சமையலையும் அவ்வாறே அவசர கதியில் முடிக்க எண்ணி உலோகப் பாத்திரங்களை நாடி




யுள்ளோம். இதன் விளைவாக நோய்களுக்கும் ஆளாகி வருகிறோம். மண்பாத்திரங்களுக்கு உடனடியாகத் திரும்புவது கடினமாக இருக்கலாம். ஆனாலும், தமிழ் மக்களின் இயற்கையைப் போற்றும் தைப்பொங்கல் திருநாளிலாவது மண் பானைகளில் பொங்கல் இடுவோம். இது நலிவடைந்துள்ள மட்பாண்டக் கைவினையர்களது வாழ்வு மேம்படவும் உதவும். – என்றும் தெரிவித்துள்ளார்.







# புனானை வனவிலங்கு காரியாலயத்தை உடைத்து துப்பாக்கி திருடியமை தொடர்பில் மூவர் சிக்கினர்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு புனானை வனவிலங்கு காரியாலயத்தை உடைத்து துப்பாக்கி உட்பட இலத்திரனியல் பொருள்களைத் திருடிய சம்பவம் தொடர்பாக சித்தாண்டியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் மற்றும் திருட்டுப் பொருத்களை வைத்திருந்த பெண் ஒருவர் உட்பட 3 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்துள்ளமையுடன் திருடப்பட்ட துப்பாக்கி உட்பட பொருள்களைத் தாங்கள் மீட்டுள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 ஆம் திகதி வாழைச்சேனை – கொழும்பு வீதியிக் புனாணையில் அமைந்துள்ள வனவிலங்கு பாதுகாப்பு காரியாலயத்தின் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த ஷொட்கண் துப்பாக்கி ஒன்று அதற்கான 3 தோட்டாக்கள், துளை கருவியான ரில்லர் ஒன்று, எரிவாயு அவன் ஒன்று, மின்விசிறி ஒன்று ஆகிய பொருள்கள் திருடப்பட்டன.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் அந்த பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டுவந்த சித்தாண்டியைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரைக் கைது செய்து விசாரணை செய்தனர். திருடப்பட்ட துப்பாக்கி அண்டிய காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அதனைப் பொலிஸார் மீட்டனர்.

இதனை தொடர்ந்து புனானை பிரதேசத்தில் உள்ள விகாரைக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மின்விசிறி உட்பட்டப் பொருள்களும் மீட்கப்பட்டன.

திருட்டுப் பொருள்களை வைத்திருந்த வீட்டின் உரிமையாளரான பெண் ஒருவர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். ஒருவர் தலைமறைவாகி உள்ளார் எனக் கூறப்பட்டது. கைது செய்யப்பட்ட 3 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# அம்பாறை மாவட்டத்தில் கடலரிப்பு: மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு!

(அபு அலா)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவிய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட கடற்கொந்தளிப்புக் காரணமாக கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களில் பாரியளவில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மீனவர்களின் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள். அதனால் தங்களுக்கு நிவாரணம் தர வேண்டுமென்று மீனவர்கள் கோருகின்றனர்.

கல்முனை மற்றும் கல்முனைக்குடி, நிந்தவூர் கடற்கரைப் பள்ளிவாசல் பிரதேசத்தில் சுமார் 50 அடி முன்நோக்கி கடல் நகர்ந்துள்ளது. இதனால் கடற்கரையை அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கொங்றீட் பாதை முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் மின்கம்பங்களும் முறிந்து விழுந்துள்ளன. மீனவர்களின் பொது ஓய்வு மண்டபமும், வேறு சில கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

அதேநேரம் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்திலும் மிகவும் மோசமான வகையில் கடலரிப்பு ஏற்பட்டு கடலும் முன்நோக்கி நகர்ந்துள்ளது. மீனவர்களின் வாடிகளும் சேதமடைந்துள்ளன. இதனால், அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள உடல்கள் கடலிலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



# தற்காலிகமாக வர்த்தக விற்பனை நிலையங்களை திருமலையில் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாநகர பிரதேசத்தில் இனி தற்காலிக வர்த்தக விற்பனை நிலையங்களை அமைக்க மாநகரசபை அனுமதி வழங்காது என மேயர் க.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகர வியாபார சங்கத்தினர் நேற்று தற்காலிக வர்த்தக விற்பனை நிலையங்களால் தமது வியாபாரங்கள் பாதிக்கப்படுகின்றன, எனவே இவ்விற்பனை நிலையங்களுக்கு மாநகர சபை அனுமதி வழங்கக்கூடாது என்று கூறி சபை கட்டடத்திற்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து வர்த்தக சங்கப் பிரதி நிதிகளுடன் மாநகர மேயர் பேச்சுகளில் ஈடுபட்டார். அப்பேச்சு வார்த்தையில் எதிர் வரும் காலத்தில் மாநகர சபையினால் தற்காலிக விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது மாநகரசபைக்கு உரித்தான மக்ஹேசியர் மைதானத்தில் பாரியளவிலான தற்காலிக வர்த்தக விற்பனை நிலையம் ஒன்று வெளி மாவட்டத்தில் இருந்து வந்துள்ள ஒரு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று வருடாந்தம் இதே இடத்தில் பல்வேறு காலங்களில் தற்காலிக விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. இவற்றிற்கான வியாபார அனுமதிகள் மாநகரசபையினால் வழங்கப்பட்டு வந்துள்ளது.










# புதுக்குடியிருப்பில் ரி56 ரவைகளுடன் ஒருவர் கைது

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் பகுதியில் ரி 56 ரக துப்பாக்கிக்குரிய ரவைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 38 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேராவில் இளங்கோபுரம் பகுதியைச் சேர்ந்த இந்த நபர், நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது, விசேட அதிரடி படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு விசேட அதிரடி படையினரால் வழிமறித்து சோதனை செய்யப்பட்டுள்ளார்.

சோதனையின் போது குறித்த நபரின் உடமையில் ரி56 ரக துப்பாக்கிக்குரிய 8 ரவைகள் வைத்திருந்தமை கண்டறியப்பட்டதையடுத்து, மோட்டார் சைக்கிளுடன் அந்த 8 ரவைகளும் கைப்பற்றப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிஸ் விசாரணைகளின் பின்னர் நேற்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத் தப்படவிருந்தார்.





# கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் மாணவர்கள் மனதை சிதைப்பதா?

## சஜித் பிரேமதாஸ கேள்வி

இலங்கையின் கல்வித்துறையில் சீர்திருத்தம் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், மாணவர்களின் மனதைச் சிதைக்கும் வகையில் அமைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிப்பதன் மூலம் கல்வியில் ஏற்பட்டுள்ள பாரிய குறைபாடுகளை மூடிமறைக்க வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் "மூச்சு" திட்டத்தின் கீழ், கொலன்ன ஆதார மருத்துவமனைக்கு 28 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று நாட்டின் பிரதான பேசுபொருளாக கல்வி மாறியுள்ளது. கல்வி அமைச்சுப் பொறுப்பிலுள்ளவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் அல்லது அவர்களின் தனிப்பட்ட நடத்தை குறித்து விமர்சிப்பது எமது நோக்கமல்ல. 220 லட்சம் மக்களின் தனிப்பட்ட சுதந்திரம் மற்றவர்களுக்கு அவசியமற்றது.

ஆனால், இன்று தனிப்பட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி, கல்வியில் எழுந்துள்ள பாரிய நெருக்கடிகளைச் சில தரப்பினர் திட்டமிட்டு மறைக்க முற்படுகின்றனர்.

முறையான கலந்துரையாடல்களின்றி, வெறும் 'PowerPoint' காட்சிப்படுத்தல்கள் மூலம் முன்னெடுக்கப்படும் இந்தச் சீர்திருத்தங்கள், 41 இலட்சம் மாணவர்களின் சிந்தனையைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லும் வகையில் அமைந்துள்ளன.

கல்வித்துறையில் ஆபாசக் கருத்து உள்வாங்கப்படுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. இங்கிலாந்து முறைமை அல்லது STEAM கல்வி மற்றும் எமது வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கிய சமநிலையான சீர்திருத்தங்களையே நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்தக் கல்வி விபரீதத்திற்குப் பொறுப்பானவர்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

வெறும் அதிகாரிகள் மீது மட்டும் பழியைப் போட்டுவிட்டு அரசாங்கமும், கல்வி அமைச்சரும் தப்பித்துக்கொள்ள முடியாது.

கல்விச் சீர்திருத்தத்தின் பின்னணியில் மிகப்பெரிய சதி மறைந்துள்ளது. இதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்." என்று தெரிவித்தார்.











# எம்.பிக்கள் ஓய்வூதியம் குறித்த சட்டமூலம் அடுத்த 6 வாரங்களுக்குள் நிறைவேற்றப்படும்

## பிமல் ரத்நாயக்க அறிவிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய முறையை இரத்து செய்வதற்கான சட்டமூலம் அடுத்த 6 வாரங்களுக்குள் நிறைவேற்றப்படும் என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசியலை இலாபம் ஈட்டும் தொழிலாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதும், பொதுச் சேவையில் நேர்மையை ஊக்குவிப்பதும் இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அத்துடன் கொழும்பில் உள்ள 4 அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் இனி நீதித்துறை சார்ந்த பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசியல்வாதிகளுக்கான வரப்பிரசாதங்களைக் குறைத்து, மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.” என்று தெரிவித்தார்.

# கலாசார விவகாரங்களில் ஜனாதிபதி தலையிட கூடாது

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்னணி கொள்கைகளுக்குப் பொருந்தக்கூடிய கல்விச் சீர்திருத்தங்கள் நாட்டிற்கும் பொருந்தும் என ஜனாதிபதி கருதினால், அது ஒரு தவறான முடிவாகும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அண்மைக்கால உரை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முன்மொழியப்பட்டுள்ள கல்வி சீர்திருத்தங்கள் நாட்டிற்குப் பொருந்தாதவை எனத் தெரிந்தும், அவற்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயாராகி வருகின்றது.

அகங்காரத்துடன் எடுக்கப்படும் முடிவுகள் நாட்டுக்கோ, மக்களுக்கோ அல்லது ஜனாதிபதிக்குத் தானோ நீதியைப் பெற்றுத்தராது.

நாட்டிற்கு அவசியமான மற்றும் பொருத்தமானவற்றை மட்டுமே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் மதம் மற்றும் கலாசார விவகாரங்களில் ஜனாதிபதி தலையிட வேண்டாம்.

கல்வி முறைமையிலும், அரச இயந்திரத்திலும் மாற்றங்கள் தேவை என்பதைத் நானும் பொதுமக்களும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அந்த மாற்றங்கள் மக்கள் விடுதலை முன்னணியைத் திருப்திப்படுத்துவதற்காக அன்றி, நாட்



டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைய வேண்டும்.

நாட்டின் கல்வி முறைமைக்கு முரணான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த முயல்வதன் விளைவுகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.” – என்றார்.

# நிதி மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ் எச்சரிக்கை



இணையவழி மோசடிகள் மற்றும் நிதி மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் அறிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சைபர் குற்றத் தடுப்புப் பிரிவு முன்னெடுத்துள்ள விசாரணைகளைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி எப்.யு. வூட்லர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட தகவல்களையோ அல்லது வங்கி மற்றும் நிதி தொடர்பான விவரங்களையோ எவருக்கும் பகிர வேண்டாம் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் சமூக வலைத்தளங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் நிதிமோசடிகள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயல்களைக் கையாள்வதற்கு சைபர் குற்றத் தடுப்புப் பிரிவு முழுமையான வசதிகளுடன் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறானகுற்றங்களில்ஈடுபடுவோர் கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக பொலிஸ் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையதளங்கள் வாயிலாக நடைபெறும் மோசடிகள் அண்மைக்காலமாகப் பெருமளவில் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாகவே, விசாரணைகளைத் தீவிரப்படுத்தவும் பொதுமக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கவும் பொலிஸ் தீர்மானித்துள்ளது.



# சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கினர் கைதிகள்

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, இலங்கையிலுள்ள 10 சிறைச்சாலைகளைச் சேர்ந்த கைதிகள் தங்களது ஒரு வேளை உணவைத் தியாகம் செய்து, 34.6 லட்சம் ரூபா மதிப்பிலான உணவுப் பொருள்களைப் பங்களிப்பாக வழங்கியுள்ளனர் என சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைக்கைதிகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒரு வேளை உணவைத் தவிர்த்து, அதன் மூலம் மிச்சப்படுத்தப்பட்ட பெருமளவிலான நிதியை உணவுப் பொருள்களாக வழங்கியுள்ளனர்.

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை: 540,679 ரூபா, மெகசின் சிறைச்சாலை: 450,710 ரூபா, வெலிக்கடை சிறைச்சாலை 454,630 ரூபா, மகர சிறைச்சாலை 386,010 ரூபா, போகம்பரை சிறைச்சாலை 367,949 ரூபா, யாழ்ப்பாணம் சிறைச்சாலை: 258,612 ரூபா, மட்டக்களப்பு சிறைச்சாலை 209,224 ரூபா, குருவிட்ட சிறைச்சாலை 195,150 ரூபா, மாத்தறை சிறைச்சாலை: 105,046 ரூபா, மொனராகலை சிறைச்சாலை 96,471 ரூபா, இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள கைதிகள் இன, மத பேதமின்றிப் பாதிக்கப்பட்ட நாட்டு மக்களுக்காகத் தங்களது உணவைத் தியாகம் செய்து இந்த மனிதாபிமான உதவியைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி நடவடிக்கையில் தவறு ஏற்பட முடியாது

## தலதா அத்துகோரள தெரிவிப்பு

“தரம் 6 பாடப்புத்தகத்தில் ஏற்பட்டுள்ள பிழையான உட்புகுத்தல் தவறுதலாக ஏற்பட முடியாது. அது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதனாலே பிரதமரை கல்வி அமைச்சு பதவியில் இருந்து விலகுமாறு தெரிவிக்கிறோம்.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதியின் அரசியல் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“கல்வி நடவடிக்கையில் தவறு ஏற்பட முடியாது. தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த தவறு பாரதூரமான விடயமாகும். இந்த பிழை தவறுதலாக ஏற்பட்ட ஒன்று என ஒருபோதும் தெரிவிக்க முடியாது.

திட்டமிட்டே மேற்கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் பாடப்புத்தகம் தயாரிக்கும் போது அதற்கு கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம், கல்வி அமைச்சு மற்றும் பிரதமரால் நியமிக்கப்பட்ட கல்வியலாளர்களைக் கொண்ட நிபுணர்கள் குழு என இவர்கள் அனைவரும் இணைந்தே இந்த பணியை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் 1980 காலப்பகுதியில் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அது தொடர்பில் ஒரு வெள்ளை கடதாசி தயாரிக்கப்பட்டு, ஆலோசனை பெறப்பட்டது. அந்த ஆலோசனை கூட்டத்துக்கு பெற்றோர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ள யார் வேண்டுமானாலும் வந்து, தங்களின் கருத்துக்களை தெரிவிக்க முடியும்.

அன்று மேற்கொண்ட இந்த நடவடிக்கைக்கு தற்போதுள்ள ஆட்சியாளர்களே கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள். ஆனால் இவர்களின் இந்த கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் யாருடனும் கலந்துரையாடவில்லை. தற்போது தற்காலிகமாக பதவி விலகியுள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருக்காவது இடம்பெற்றுள்ள திருத்தங்கள் என்ன என தெரியுமா தெரியாது.

அத்துடன், கல்வி மறுசீரமைப்பில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த குழப்ப நிலையில்,இவர்கள் இன்று எதிர்க்கட்சியில் இருந்திருந்தால், பல்கலைக்கழக மாணவர்களை வீதியில் இறக்கி, இரத்தக் களறியை ஏற்படுத்தி இருப்பார்கள்.

அதேநேரம் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான ஒரு போராட்டமாக இதனை அவர்கள் அமைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் அவ்வாறான ஒரு நிலை இல்லாமல் ஜனநாயக முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாலே அரசாங்கம் இன்னும் இதனை பிடித்துக் கொண்டிருக்கிறது.



எனவே கல்வி அமைச்சராக பிரதமர் சிறந்த பெண் என்றால்,ஏற்பட்டிருக்கும் இந்த தவறை ஏற்றுக்கொண்டு கல்வி அமைச்சை இராஜினாமா செய்ய வேண்டும். ஏனெனில் இவ்வளவு பெரிய தவறு இடம்பெற்றும் அதுதொடர்பில் கல்வி அமைச்சர் என்றவகையில் பிரதமருக்கு தெரியாது என்றால், அவரால் அந்த அமைச்சை கொண்டு செல்ல முடியாது. அதனால் அவர் பதவி விலகி அந்த அமைச்சை முன்னெடுத்துச்செல்ல முடியுமான ஒருவருக்கு வழங்க வேண்டும்.”– என்றார்.



# உச்சம் தொட்ட மரக்கறி விலை

பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

அதன்படி, தம்புள்ளை மற்றும் கெப்பெட்டிபொலவில் 450 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி ஒரு கிலோ கிராம், நுவரெலியாவில் 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், கறிமிளகாய் ஒரு கிலோ கிராம் நுவரெலியாவிலும் கெப்பெட்டிபொலவிலும் 600 ரூபா முதல் 700 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட நிறையில், தம்புள்ளையில் 500 ரூபா முதல் 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பச்சை மிளகாய் ஒரு கிலோ, கெப்பெட்டிபொலவில், 650 ரூபா முதல் 900 ரூபா வரைக்கும், தம்புள்ளையில், 700 ரூபா முதல் 800 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில், பச்சை மற்றும் சிவப்பு குடை மிளகாய் 900 ரூபாவுக்கும், மஞ்சள் குடை மிளகாய் அயிரத்து 500 ரூபா வரைக்கும் விற்பனையாகியுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில், நுவரெலியா கரட் 250 ரூபா முதல் 330 ரூபா வரைக்கும், யாழ்ப்பாண கரட் 300 ரூபா முதல் 330 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கோவா ஒரு கிலோ 200 ரூபாவுக்கும், போஞ்சி ஒருகிலோ 500 ரூபாவுக்கும், லீக்ஸ் ஒருகிலோ 300 ரூபாவுக்கும், நுவரெலியா பீட்ரூட் 520 ரூபாவுக்கும் தம்புள்ளையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நுவரெலியாவில், கோவா ஒருகிலோ 180 ரூபாவுக்கும் கரட் ஒருகிலோ 330 ரூபாவுக்கும், லீக்ஸ் ஒருகிலோ 300 ரூபாவுக்கும் மற்றும் பீட்ரூட் ஒருகிலோ 400 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கெப்பெட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தில், போஞ்சி ஒரு கிலோ 400 முதல் 450 ரூபாவுக்கும், பீட்ரூட் ஒருகிலோ 500 ரூபா முதல் 600 ரூபாவுக்கும் கோவா ஒருகிலோ 150 ரூபா முதல் 200 ரூபா வரைக்கும் மற்றும் கரட் ஒருகிலோ 220 ரூபா முதல் 300 ரூபா வரைக்கும் நேற்று விற்பனையாகியுள்ளன.

# 2026 இன் தொடக்கத்திலேயே சுற்றுலாத்துறை பெரும் எழுச்சி



2026 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே இலங்கையின் சுற்றுலாத்துறை பெரும் எழுச்சியைக் கண்டுள்ளது.

கடந்தஜனவரி1ஆம்திகதிமுதல்8ஆம் திகதி வரையிலான முதல் எட்டு நாள்களில் மட்டும் மொத்தம் 67,762 சுற்றுலாப் பயணிகள்நாட்டிற்குவருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில், ஜனவரி 6 ஆம் திகதி ஒரே நாளில் மட்டும் அதிகபட்சமாக 9,275 பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.

இந்தியாவிலிருந்து 11,367 பயணிகள் வருகை தந்துள்ள அதேவேளை, அதனைத் தொடர்ந்து ரஷ்யாவிலிருந்து 8,425 பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,067 பயணிகளும் வருகை தந்துள்ளனர். மேலும், ஜேர்மனியிலிருந்து 5,306 பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

# நடிகர் விஜய்யை டில்லிக்கு வரவழைத்து அரசியல் ஒப்பந்தம் போட பா.ஜ.க முயற்சி

## செல்வப்பெருந்தகை தெரிவிப்பு





"கரூர் வழக்கை இங்கே விசாரித்து இருந்தால் இவ்வளவு சிரமமும் சங்கடமும் ஏற்பட்டு இருக்காது. டில்லிக்கு விஜய்யை வரவழைத்து அரசியல் ஒப்பந்தமும், தேர்தல் ஒப்பந்தமும் போடுவதற்கு முயற்சி செய்யலாமா என பா.ஜ.க. பார்த்துக்கொண்டு இருக்கிறது."

– இவ்வாறு காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை சென்றார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"நீலகிரி மாவட்டத்துக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி வருகிறார். ராகுல் காந்தியுடன் தனியார் பள்ளி விழாவிலும், சமத்துவப் பொங்கல் விழாவிலும் கலந்து கொள்ளவுள்ளோம்.

கூடலூரில் ராகுல் காந்தி கலந்துகொள்வது முழுக்க முழுக்க பள்ளி நிகழ்ச்சி. இதில் அரசியல் கலப்பு இல்லை. பள்ளி விழாவிலும், பொங்கல் விழாவிலும் அவர் கலந்து கொள்கிறார்.

கரூர் கூட்ட நெரிசல் வழக்கை இங்கே விசாரித்து இருந்தால் இவ்வளவு சிரமமும் சங்கடமும் ஏற்பட்டு இருக்காது. டெல்லிக்கு வரவழைத்து அரசியல் ஒப்பந்தமும், தேர்தல் ஒப்பந்தமும் போடுவதற்கு முயற்சி செய்யலாமா என பாஜக பார்த்துக்கொண்டு இருக்கிறது. அவர்களின் முயற்சி வெற்றி பெற வாய்ப்பு இல்லை. ஒப்பந்தத்துக்கு தயாரானால் வழக்குகள் மாயமாகிவிடும், மறைந்துவிடும்.

பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை அறிவில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார். மகாராஷ்டிரா பற்றி, மும்பையைப் பற்றி பேசுவார். ஆனால், தமிழகத்தைப் பற்றி அறிவுபூர்வமாக, நாகரிகமாக பேச மாட்டார்.

இந்தியா கூட்டணி அங்கம் வகிக்கும் கட்சிகள் எங்கெல்லாம் ஆட்சி செய்கின்றதோ, அங்கு காங்கிரஸுக்கும் பொறுப்புண்டு. அதை காங்கிரஸ் ஆட்சியாகத்தான் பார்க்கிறோம். ஒவ்வொரு வருக்கும் ஒரு கருத்து இருக்கின்றது. அது தொடர்பாக எங்கள் தலைமையும், தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் ஸ்டாலின் தலைமையும் சேர்ந்துதான் முடிவு எடுப்பார்கள். இந்தியா கூட்டணி வலிமையாக இருக்கிறது. எஃகு கோட்டையாக இருக்கிறது. இது கொள்கை அடிப்படையில் உருவான கூட்டணி.

மதவாதிகளை தமிழ் மண்ணில் ஊடுருவர் கூடாது என்பதற்காகவும், தமிழக மக்களை காக்கவும் உருவானது இந்தியா கூட்டணி. எங்கள் தலைமை வேறு யாருடனும் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை. காங்கிரஸுக்கு கொள்ளைப்புற அரசியல் செய்யும் பழக்கம் கிடையாது. நேரடியாக அரசியல் செய்வோம்.

அகில இந்திய தலைமை, தி.மு.கவுடன் பேச குழு அமைத்திருக்கிறது. வேறு யாருடனும் பேச சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பொது வெளியில் பேசுவதை தவிர்க்க வேண்டும் என பலமுறை சொல்லி இருக்கிறேன். கூட்டணிக்கு குந்தகம் விளைவிக்கின்ற மாதிரி கருத்துகளை இனிமேல் பேச மாட்டார்கள்." என்று தெரிவித்துள்ளார்.

# விஜய்யின் கோரிக்கையை ஏற்றது சி.பி.ஐ.; பொங்கலுக்குப் பின் மீண்டும் விசாரணை



கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரிக்கப்பட்டு வரும் த.வெ.க. தலைவர் விஜய்யின் கோரிக்கையை ஏற்ற சி.பி.ஐ, இன்றைய விசாரணையை ஒத்திவைத்துள்ளது. பொங்கல் பண்டிகைக்குப் பின் மீண்டும் அவரிடம் விசாரணை நடத்தப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் டில்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் த.வெ.க. தலைவர் விஜய்யிடம் நேற்று நடத்தப்பட்ட விசாரணை நிறைவுபெற்றது. அவரிடம் இன்றும் விசாரணை நடத்தப்படவிருந்த நிலையில், பொங்கல் பண்டிகையையொட்டி கட்சி நிகழ்ச்சிகள் இருப்பதால் இன்றைய விசாரணைக்கு விலக்கு அளிக்க வேண்டும் என விஜய் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதை ஏற்றுக் கொண்ட சி.பி.ஐ. அதிகாரிகள் அவருக்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து விஜய்யிடம் நேற்று டில்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. அவரிடம் இன்னும் ஒரு நாள் விசாரணை நடத்த வேண்டி இருப்பதால், பொங்கல் பண்டிகையை காரணம் காட்டி இன்றைய விசாரணையில் இருந்து விஜய்க்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகைக்கு பிறகு நேரில் ஆஜராக வேண்டும் என்ற சி.பி.ஐயின் அறிவுறுத்தலை விஜய் ஏற்றுக் கொண்டதை அடுத்து, அவருக்கு விலக்கு அளிக்கப்பட்டது. இதனால் இன்று காலை அவர் சென்னை திரும்புகிறார். விஜய்யிடம் மீண்டும் விசாரணை நடத்தவுள்ள திகதியின் விவரம் பின்னர் தெரிவிக்கப்படும் என்று சி.பி.ஐ. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை பயன்படுத்த தடைவிதிக்கக் கோரி வழக்கு

நடிகர் கமல்ஹாசன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்திருந்தார்.

அவரது பெயர், புகைப்படம், குரல் மற்றும் “உலகநாயகன்” என்ற பட்டத்தையும் அனுமதி இல்லாமல் வணிக ரீதியாகப் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கக் கோரி அவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

“நீயே விடை“ என்ற நிறுவனம் அனுமதியின்றி கமலின் புகைப்படங்களையும், வசனங்களையும் டி-சர்ட்டுகளில் பயன்படுத்துவதை சுட்டிக்காட்டி உரிமையியல் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

மேற்படி நிறுவனம் மட்டுமில்லாமல் வேறு எந்த நிறுவனங்களும் தன்னுடைய பெயர், புகைப்படம், பட்டங்களையும், வசனங்களையும் பயன்படுத்தத் தடைவிதிக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை அனுமதியின்றி வணிக ரீதியாக பயன்படுத்த இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

# வெனிசுலாவின் ஜனாதிபதி நானே: விக்கிப்பீடியாவை பகிர்ந்தார் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது “ட்ரூத் சோஷியல்” தளத்தில் விக்கிப்பீடியா பக்கத்தின் புகைப்படம் ஒன்றைப் பகிர்ந்துள்ளார்.

அதில் அவரது பெயருக்குக் கீழே “வெனிசுலாவின் தற்காலிக ஜனாதிபதி” என்ற பதவி குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்கப் படைகள் வெனிசுலா மீது பாரிய தாக்குதல் நடத்தி, அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கைது செய்தன.

அவர்கள் தற்போது நியூயோர்க்கிற்கு கொண்டு வரப்பட்டு, போதைப்பொருள் பயங்கரவாதச் சதி குற்றச்சாட்டுகளின் கீழ் விசாரணையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனையடுத்து ”வெனிசுலாவில் முறையான மற்றும் பாதுகாப்பான ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை அமெரிக்காவே அந்நாட்டை வழிநடத்தும்.” என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

வெனிசுலா 30 முதல் 50 மில்லியன் பீப்பாய் எண்ணெய்யை அமெரிக்காவிற்கு வழங்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அந்த எண்ணெய் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் தனது கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும், அது வெனிசுவேலா மற்றும் அமெரிக்க மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஈரான் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு: இராணுவ நடவடிக்கை குறித்து ட்ரம்ப் ஆலோசனை

ஈரானில் மக்கள் போராட்டங்கள் தீவிர மடைந்து வரும் நிலையில், அந்நாட்டுத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகஅமெரிக்காவைத்தொடர்புகொண்டுள்ளனர் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பேச்சுவார்த்தைக்கு முன்னதாகவே ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாத இறுதியில் தொடங்கிய இந்தப் போராட்டங்களில், பாதுகாப்புப் படைகளால் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமை அமைப்பான HRANA, இதுவரை சுமார் 500 போராட்டக்காரர்களின் மரணத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக, ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் உள்ள பிணவறையில் எடுக்கப்பட்ட காட்சிகளை ஆய்வு செய்த பிபிசி, குறைந்தது 180 உடல்கள் வெள்ளைத் துணிகளால் மூடப்பட்டிருப்பதை உறுதி செய்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

"அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார்கள். ஆனால், பேச்சுவார்த்தைக்கு முன்னதாகவே நாம் ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டியிருக்கும்" என்று குறிப்பிட்டார்.

கடந்த வாரம், ஈரானியப் படைகள் போராட்டக்காரர்கள் மீது தாக்குதலைத் தொடர்ந்தால், "நாங்களும் துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்குவோம்" என அவர் கடுமையான எச்சரிக்கை விடுத்திருந்தார்.

போராட்டங்கள் தொடர்பான தகவல்கள் வெளியில் கசிவதைத் தடுக்க, ஈரானிய அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை முதல் நாடு முழுவதும் இணையச் சேவையைத் துண்டித்துள்ளனர்.

இதனால் போராட்டக் களத்தில் நடக்கும் உண்மையான நிலவரங்களைச் சேகரிப்பதிலும், உயிரிழப்புகளை உறுதிப்படுத்துவதிலும் சர்வதேச ஊடகங்களுக்குப் பெரும் சவால் ஏற்பட்டுள்ளது.

தற்போது ஈரானுக்கு எதிராக இராணுவத் தாக்குதல் நடத்துவது அல்லது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிப்பது போன்ற கடுமையான முடிவுகள் குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் தனது ஆலோசகர்களுடன் ஆலோசித்து வருகிறார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# 5.5 இலட்சம் கணக்குகளை முடக்கிய மெட்டா நிறுவனம்




அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தடையைத் தொடர்ந்து, மெட்டா நிறுவனம் தனது தளங்களில் இருந்து சுமார் 5,50,000 கணக்குகளை முடக்கியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நடைமுறைக்கு வந்த புதிய சட்டத்தின்படி, இன்ஸ்டாகிராம், பேஸ்புக் மற்றும் த்ரெட்ஸ் போன்ற தளங்களில் 16 வயதுக்குட்பட்ட அவுஸ்திரேலிய சிறுவர்கள் கணக்கு வைத்திருப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்திற்கு இணங்கும் வகையில், அதன் முதல் வாரத்திலேயே மெட்டா நிறுவனம் இன்ஸ்டாகிராமில் 3,30,639 கணக்குகளையும், பேஸ்புக்கில் 1,73,497 கணக்குகளையும், த்ரெட்ஸ் தளத்தில் 39,916 கணக்குகளையும் முடக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மெட்டா ஒப்புக்கொண்டாலும், இத்தகைய போர்வைத் தடை தீர்வாகாது எனத் தெரிவித்துள்ளது.

அதற்குப் பதிலாக, எப் ஸ்டோர் மட்டத்திலேயே வயதுச் சரிபார்ப்பைச் செய்வது மற்றும் பெற்றோரின் அனுமதிக்கு விதிவிலக்கு அளிப்பது போன்ற மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு அவுஸ்திரேலிய அரசாங்கத்தை மெட்டா வலியுறுத்தியுள்ளது.

இதுவே அனைத்து செயலிகளுக்கும் பொருந்தக்கூடிய நிலையான பாதுகாப்பை வழங்கும் என்றும் அந்நிறுவனம் வாதிடுகிறது.

பெற்றோரின் அனுமதிக்கும் வாய்ப்பளிக்காத அவுஸ்திரேலியாவின் இந்தச் சட்டம் உலகிலேயே மிகவும் கடுமையானதாகக் கருதப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள்- 13.01.2026




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்துகொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப் பணிகளைக் கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படுவீர்கள். பதட்டப்படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதைஅடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்தியமும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள். இதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.




நீங்கள் இன்று உணர்ச்சிப்பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்தநேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியைப் பெறலாம்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணியாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள்- 13.01.2026




இன்று பலன்கள் கலந்து காணப் படும். இன்று மனதில் தெளிவு வேண் டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாய் இருக்க பணம் செலவு செய்ய நேரும்.




இன்று தியானம் அல்லது பிரார்த் தனை மேற்கொள்வது மிகவும் அவசியம்.அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண் ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்ட மிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்ப தாக உணர்வீர்கள். சிறந்த யுக்திக ளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப்போவதும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவுகளை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.





# திருமலை வீரநகரை கடலரிப்பில் இருந்து பாதுகாக்க கருங்கல் போடும் பணி துரிதம்

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா விரைந்து நடவடிக்கை

(எம்.எம்.நௌபீக்)

திருகோணமலை வீரநகர் பகுதியில் கடந்த சில நாட்களாக கடலலையின் உக்கிரத்தால் ஏற்பட்ட கடலரிப்பு காரண மாக சில குடியிருப்புக்கள் மற்றும் மீன வக் கட்டடங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அப்பிரதேசத்தினை நேரில் பார்வையிட்ட வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் உத்தரவின் பேரில் பாரிய கருங்கற்கள் போடப்பட்டு கடலரிப்புத் தடுக்கப்படுகின்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதேசவாழ் பொதுமக்கள் பிரதி அமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

